

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சேப்பாக்கம் திருவல்லிக்கேணி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட திருவல்லிக்கேணி பகுதியில் இயங்கி வரும் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையத்தில், தேசிய காசநோய் ஒழிப்புத் திட்டத்தின் கீழ் சிகிச்சை பெற்று வரும் காசநோயால் பாதிக்கப்பட்ட 250 நோயாளிகளுக்காக ஊட்டச்சத்து உணவுப் பொருட்களை நேற்று (29.3.2025) மருத்துவர்களிடம் வழங்கினார். இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், பெருநகர சென்னை மாநகராட்சி நிலைக்குழுத் தலைவர் (பணிகள்) நே.சிற்றரசு உள்பட மருத்துவர்கள், செவிலியர்கள் உடனிருந்தனர்.

### தென் சென்னை மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகம் சார்பில்

# 119 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.1.21 கோடியில் மூன்று சக்கர ஸ்கூட்டர்கள்!

## கிண்டியில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் வழங்கினார்!

சென்னை, மார்ச் 30-

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தென் சென்னை மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகம் சார்பில் 119 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.1.21 கோடி மதிப்பிலான இணைப்புச் சக்கரம் பொறுத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்களை வழங்கினார்.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (29.03.2025) கிண்டி அரிமா சங்க லேபர் காலனி உயர்நிலைப் பள்ளியில், தென் சென்னை மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகம் சார்பில் 119 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.1,21,14,200 மதிப்பிலான இணைப்புச் சக்கரம் பொறுத்தப்பட்ட இணைப்புச் சக்கரம் பொறுத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்களை வழங்கினார்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மாற்றுத்திறனாளிகளுக்கு எண்ணற்ற பல திட்டங்களை வழங்கிக்கொண்டிருக்கிறார்கள். தமிழ்நாடு முழுவதும் கடந்த நான்கு ஆண்டுகளில் 37,864 மாற்றுத்திறனாளி நபர்களுக்கு ரூ.95.6 கோடி மதிப்பில் பராமரிப்பு உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது. சுய வேலைவாய்ப்பு வழங்கும் திட்டத்தின் கீழ் 150 பயனாளிகளுக்கு ரூ.32,20,526/ மதிப்பீட்டில் வங்கிகடன் மானியம் வழங்கப்பட்டுள்ளது. ஆவின் பாலகம் அமைக்கும் திட்டத்தின் கீழ் ஆவின் பாலகத்திற்கு தேவையான பொருட்களை வாங்கும் பொருட்டு ஒவ்வொரு நபருக்கு ரூ.50,000/ வீதம் 14 நபர்களுக்கு ரூ.7,00,000/ மானியம் வழங்கப்பட்டுள்ளது. கல்வி உதவித்தொகை வழங்கும் திட்டத்தின் கீழ் ஒன்றாம் வகுப்பு முதல் முதுகலை வரை பயிலும் 5,615 மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கு ரூ.3,71,70,521/ கல்வி உதவித்தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

வாசிப்பாளர் உதவித் தொகை என்ற வகையில் 1,201 பார்வையற்ற மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. உதவித்தொகையும்ரூ.64,01,800/ வழங்கப்பட்டுள்ளது. 21 வகையான உதவி உபகரணங்கள் 2,676 நபர்களுக்கு ரூ.58.8 கோடி மதிப்பில் வழங்கப்பட்டுள்ளது.

தென் சென்னை மாவட்டத்தைப் பொறுத்த வரையில், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலரின் தீவிர முயற்சியின் காரணமாக, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலை ஏற்று, பெருமதிப்புமிக்க மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் சிறப்பு மிக்க நிர்வாகத்தின் கீழ் தென் சென்னை மாவட்டத்தில் மட்டும் 2024-2025ஆம் நிதியாண்டில் பராமரிப்பு உதவித்தொகையாக மாதம் ரூ.2,000/வீதம் 12 மாதங்களுக்கு அறிவுசார் குறைபாடு மற்றும் கடுமையாக பாதிக்கப்பட்ட 6,333 நபர்களுக்கு ரூ.15,19,92,000/ வழங்கப்பட்டுள் ளது. தசை சிதைவு நோயால் பாதிக்கப்பட்ட 117 நபர்களுக்கு ரூ.28,08,000/ வழங்கப்பட்டுள்ளது. முதுகு தண்டுவடத்தால் பாதிக்கப்பட்ட 60 நபர்களுக்கு ரூ.14,40,000/ வழங்கப்பட்டுள்ளது. தொழுநோயால் பாதிக்கப்பட்டு குணமடைந்த 220 நபர்களுக்கு ரூ.4,80,000/ ஆக மொத்தம் 6,656 மாற்றுத்திறனாளி நபர்களுக்கு தென் சென்னையில் மட்டும் ரூ.15,67,20,000/ பராமரிப்பு உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது.

மேலும், மாற்றுத்திறனாளிகளுக்கான பாலகம் ஆவின் அமைக்கும் திட்டத்தின் கீழ் ஆவின் பாலகத்திற்கு தேவையான பொருட்களை வாங்கும் பொருட்டு ஒரு நபருக்கு ரூ.50,000/ வீதம் 3 நபருக்கு இந்த மாவட்டத்தில் மட்டும் ரூ.1,50,000/ மானியம் வழங்கப்பட்டுள்ளது. மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கான கல்வி உதவித்தொகை வழங்கும் திட்டத்தின் கீழ் 1,009 குழந்தைகளுக்கு ரூ.90,76,000/ கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது. 197 பார்வையற்ற மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கு ரூ.9,35,000/ வாசிப்பாளர் உதவித்தொகையும் வழங்கப்பட்டுள்ளது. மாற்றுத்திறனாளிகளுக்கு உதவி உபகரணங்கள் வழங்கும் திட்டத்தில் 202425ம் நிதியாண்டு கால்கள் பாதிக்கப்பட்ட 210 மாற்றுத்திறனாளி ரூ.2,13,78,000/ நபர்களுக்கு இணைப்பு செலவில் சக்கரம் பொறுத்தப்பட்ட பெட்ரோல் வாகனம் வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் தான் இன்று (29.03.2025) தென் சென்னை எல்லைக்குட்பட்ட, கால்கள் பாதிக்கப்பட்ட 119 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.1,21,14,200/ மதிப்பிலான இணைப்பு சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர் வழங்கப்பட்டது. இதில் சைதாப்போட்டையில் 21 நபர்களுக்கும், தியகராயநகரில் 8 நபர்களுக்கும், வேளச்சேரியில் 19 நபர்களுக்கும், விருகம்பக்கத்தில் 19 நபர்களுக்கும், சேப்பாக்கத்தில் 9 நபர்களுக்கும், மதுரவாயலில் 23 நபர்களுக்கும், ஆலந்தூரில் 10 நபர்களுக்கும், மயிலப்பூரில் 10 நபர்களுக்கும் என 119 மாற்றுத்திறனாளிகளுக்கு இணைப்பு சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர் வழங்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில் விருகம் பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி.பிரபாகர் ராஜா, சென்னை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. ரஷ்மி சித்தார் ஜகடே, கோடம்பாக்கம் மண்டல குழு தலைவர் எம்.கிருஷ்ணமூர்த்தி, அடையாறு மண்டல குழு தலைவர் இரா. துரைராஜ், தென்சென்னை மற்றுத்திறனாளிகள் நல அலுவலர் சி.குமார், மாமன்ற உறுப்பினர் மோகன்குமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.





சென்னை மேற்கு மாவட்டம் சேப்பாக்கம் திருவல்லிக்கேணி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட 8000 இஸ்லாமிய குடும்பங்களுக்கு. ரமலான் திருநாளை முன்னிட்டு, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாவின், தயாநிதி மாறன் எம்.பி. ஆகியோர் நலத்திட்ட உதவிகள் வழங்கினர். உடன் மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு, பகுதி செயலாளர் மதன் மோகன், உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளனர்.



மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் கிண்டி அரிமா சங்க லேபர் காலனி உயர்நிலைப்பள்ளியில், நேற்று (29.03.2025) தென் சென்னை மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகம் சார்பில் மாற்றுத்திறனாளிகளுக்கான இணைப்புச் சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்களை வழங்கினார். உடன் சென்னை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. ரஷ்மி சித்தார் ஜகடே, விருகம்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி.பிரபாகர் ராஜா, கோடம்பாக்கம் மண்டல குழு தலைவர் எம்.கிருஷ்ணமூர்த்தி, அடையாறு மண்டலகுழுதலைவர் இரா.துரைராஜ், தென்சென்னை மற்றுத்திறனாளிகள் நல அலுவலர் சி.குமார், மாமன்ற உறுப்பினர் மோகன்குமார் ஆகியோர் உள்ளனர்.

